# திருமால் தலங்கள் 2

கல்லைமிதித்து அகலிகையின் சாபம்தீர்த்தவனே
வில்லைமுறித்து வைதேகியின் கரம் பற்றியவனே
தொல்லைஅறுத்து அரக்கனின் சிரம்செற்றவனே
1 மல்லை அடைந்து தலச்சயனன் என்றானவனே!

குணம்கெட்டவர் ஒருமண்டலம்வந்து வணங்கி
குணமாகிநின் புகழ்பாடிச் செல்லும் தலமது
கணமும் உனைப்பிரியாத அடியேனும் இன்று
2 குணசீலம் வந்தேன் சீனுவாசனே உனைக்காண

பொய்சொல்லி உனைக்காத்த ததிபாண்டனுக்கு
பொய்க்காமல் மோக்ஷம் தந்தருளிய கோபாலனே
மெய்யாக உமைத்துதிக்கும் பக்தர்களும்
3 உய்ய மன்னார்குடி வந்தமர்ந்த பெருமாளே

உப்பில்லாமல் சிறுபெண்சமைத்த அன்னத்திற்கு
ஒப்பாகுமோ அமுதமும் என்று அவ்வமுதை
தப்பாமல் புசித்துமகிழ்ந்த பெருமானே! உனக்கு
4 ஒப்புயாருமில்லாதிருக்கும் உப்பிலியப்பனே!
கோடகன்விஷமுறித்துகாத்தாய்நல்லவனையன்று
பாதகம்செய்வாரை முடிக்க இன்று பிரகன்
மாதவனாய்கோடகநல்லூரில்காட்சிதருபவனே
5 மாதவம் செய்தேன் உனை அங்கு தரிசிக்கவே!

நின்பால் மனஞ்செல்லாது அலைந்து திரிந்தேன்
அன்பில்லா எனையுமொரு பொருட்டாக்கி
என்பால் கருணைகொண்ட பெருமானே
6 அன்பில் நகர் உறையும் பெருமானே சுந்தரனே!

சிங்கவுரு எடுத்தாய் பாலகன் கூற்றதனால்
அங்கமெலாம் சிவந்தது அரக்கனைச் செற்றதனால்
வங்கக்கரையோரம்கோயில்கொண்டு நின்றதனால்
7 மங்களகிரி வந்தேன் உன்மீதுள்ள பற்றதனால்

என்னவரம் கேட்டவர்க்கும் தந்தருளி
என்னையுமொருபொருட்டாக்கி என்னுள்புகுந்து
உன்னை மனதில் வைத்து அர்ச்சிக்கச் செய்த
8 அன்னவரம் பெருமாளே! சத்திய நாராயணனே!

குருவும் வாயுவும் தொழ நின்ற தலமல்லோ
சிறு உருவாய் நின்று பக்தர்க்கருளும் தலமல்லோ
கருமுகில் வண்ணனே நீயுறையும் தலமல்லோ
9 குருவாயூர் வந்து நானுனைக் காணவல்லவோ!

மூவடிமண் கேட்டு மன்னனும் சம்மதிக்க
மாவடிக்கொண்டு ஈரடியால் முடியாமல்
ஓரடியை மாவலி தலைவைத்த பதுமநாபனே! உன்
10 சேவடி காண வந்தேன் திருவநந்தபுரமே!

தலங்கள் 3 தொடரும்